**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF I ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, MADURAI.**

**O.S. No.249/2020**

**P.W.1**

Deposition of Witness of P.W.1 Solemnly affirmed by of this Court on **01.07.2026** in accordance with the Provisions of Evidence Act X of 1872.

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பழனிச்சாமி | **Father Name** | : பரமத்தேவர் |
| **Village** | : | **Taluk** | : |
| **Calling** | : | **Age** | : |

**வாதி தரப்பில் முதல் விசாரணை**:

நான் இவ்வழக்கில் வாதி. வழக்கு விவரம் தெரியும். எனது தரப்பு முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் கண்டுள்ள சங்கதிகள் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் கண்டுள்ள கையொப்பம் என்னுடையது தான். பிரதிவாதி என் பெயருக்கு 25.09.2017 ம் தேதி எழுதிக்கொடுத்த கடனுறுதி சீட்டு **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் 11.12.2017 ம் தேதி பிரதிவாதியின் வழக்கறிஞர் IP No.95/2015 வழக்கில் ஆஜராக வாதிக்கு அனுப்பிய அறிவிப்பின் சார்பு நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. IP.No.95/2015 வழக்கின் மனுவின் சார்பு நகல் **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதி, பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் ஒப்புகை அட்டையுடன் முறையே **வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வாதிக்கு பிரதிவாதியின் வழக்கறிஞர் அனுப்பிய 23.03.2020 ம் தேதியிட்ட பதில் அறிவிப்பின் நகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணைக்கு வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/- பழனிச்சாமி

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சாட்சியால் "சரி" என ஒப்புக்கொள்ளப்பட்டது.

JOHN SUNDARLAL SURESH
Digitally signed by JOHN SUNDARLAL SURESH
Date: 2026.07.01 07:06:16 +0530

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
மதுரை.